இன்றைய செய்தி நாளைய வரலாறு

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 355 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 20 – புதன்கிழமை 05 ஆகஸ்ட் 2026 – சென்னை 16 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 355 : Thiruvalluvar Year - 2057 - Aadi 20 - Wednesday 05 August 2026 - Chennai 16 Pages ₹ 5.00

## நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி – கையாலாகாத ‘டம்மி’ முதல்வர் விஜய் ஆட்சியின் அராஜகம்!

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் திடீர் கைது!

## தரங்கெட்ட அரசின் அராஜகத்தைக் கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கொந்தளிப்பு – இலட்சக்கணக்கான கழகத்தினர் கைது!

**சென்னை, ஆக. 5 -**

**தஞ்சை கண்டன ஆர்ப்பாட்டத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அவதூறாக பேசியதாக வழக்குப் பதிவு செய்து, கையாலாகாத ‘டம்மி’ முதலமைச்சர் விஜய் ஆட்சி நீதிபதி அறிவுறுத்தலையும் மீறி உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்துள்ளது. அரசின் இந்த அராஜகப் போக்கை கண்டித்து தமிழ்நாடு முழுவதும் கழகத்தினர் கொந்தளித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டு இலட்சக்கணக்கில் கைதாகியுள்ளனர்.**

சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் த.வெ.க. ஆட்சியில் விவசாயிகள் பாதிப்பு மற்றும் காவிரியில் தண்ணீர் திறந்து விடாததைக் கண்டித்து மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அவதூறாக, பேசாத ஒன்றை, எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி அவர்கள் பேசினார் என்று த.வெ.க. அரசின் டம்மி முதலமைச்சர் விஜய், கற்பனை செய்து கொண்டு, உதய நிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்யும் முடிவோடு, நேற்று காலையிலே நீலாங்கரையில் உள்ள உதயநிதி ஸ்டாலின் அவர்கள் இல்லத்தில் போலீசார் குவிக்கப்பட்டனர்.

உதயநிதி ஸ்டாலின் அவர்கள் போலீசாரால் கைது செய்யப்படுவார் என்ற செய்தி பரவியதும் சென்னை உயர்நீதிமன்றத்தில் தி.மு.க. சார்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது. அப்போது 12 மணி வரை அவரை போலீசார் கைது செய்யக் கூடாது என்று நீதிபதி உத்தரவிட்டார்.

**நீதிபதி உத்தரவையும் மீறிய விஜய்!**

நீதிபதி உத்தரவினையும் மீறி போலீசார் நீலாங்கரையில் ஆயிரக்கணக்கில் குவிந்த வண்ணமிருந்தனர். உடனே பல்லாயிரக்கணக்கான கழகத்தினர் குவிய குவிய அங்கே பதற்றமான சூழ்நிலை உருவானது. இந்நிலையில் நீதிமன்ற உத்தரவினையும் மீறி காவல்துறை ஆணையர் அமல்ராஜ் தலைமையில் நீலாங்கரை காவல்துறை துணை ஆணையர் விஜயகுமார் மற்றும் போலீசார், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை காலை 11 மணியளவில் கைது செய்தனர். அப்போது முன்னாள் அமைச் சர்கள் துரைமுருகன், கே.என்.நேரு, எ.வ. வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், மா. சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு உடனிருந்தனர்.

**கழகத்தினர் முழக்கம்**

உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்ததைக் கண்டித்து கழகத்தினர் சாலையில் அமர்ந்தும், படுத்தும் விஜய் அரசுக்கு எதிராக கண்டன முழக்கங்களை எழுப்பினர். இதே



போன்று தமிழ்நாடு முழுவதும் ஆங்காங்கே சாலை மறியல் மற்றும் கண்டன முழக்கங்களை கழகத்தினர் எழுப்பி தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர்.

தமிழ்நாட்டில் ஒரு அசாதாரணமான சூழ்நிலை உருவாகியுள்ளது. கைது செய்யப்பட்ட உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தஞ்சாவூருக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

கைது செய்யப்பட்ட எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை, அலைகழிக்கும் வகையில் காவல் துறையின் வாகனத்திலேயே அழைத்து செல்லப்பட்டார். அவரை பின் தொடர்ந்து தி.மு.க.வினர் பயணித்தனர்.

**தி.மு.க.வினர் சாலை மறியல்!**

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டதை கண்டித்து தமிழ்நாட்டின் பல்வேறு பகுதி களிலும் தி.மு.க.வினர் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டு இலட்சக்கணக்கில் கைதாகினர்.






சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை சோஃபா மாடல் தற்குறி த.வெ.க. அரசு கைது செய்து விசாரணை என்ற பெயரில் வன்மத்துடன் காவல் நிலையத்திற்கு அழைத்துச் சென்று காலை முதல் மாலை வரை அலைக்கழித்து நேற்று இரவு காவல் துறையினர் விடுவித்தனர். காவல் நிலையத்திலிருந்து வெளியில் வந்த உதயநிதி ஸ்டாலின் அவர்களை பல்லாயிரக் கணக்கான கழகத்தினர் திரண்டு உற்சாக முழக்கமிட்டு வரவேற்றனர். சாலையில் அவரது வாகனம் நகர முடியாத அளவிற்கு கழகத் தொண்டர்கள் வழிநெடுகிலும் குவிந்து வாணவேடிக்கையுடன் வாழ்த்து முழக்கங்களோடு எழுச்சி பொங்க வரவேற்றனர்.

## கோமாளி ஆட்சியின் கொடூரப் புத்தியால் – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது – அலைக்கழிப்பு – விடுவிப்பு! கழகத்தினர் உற்சாகம், ஆரவாரம்!